**இலங்கை புகையிரத சேவை**

**கேள்வி மனுக்கோரல்**

**கொழும்பு 10, ஓல்கோர்ட் மாவத்தை,கொழும்பு பொருட்களஞ்சியசாலை தொகுதியின் பொருட்களஞ்சியசாலை கட்டிடங்கள் மற்றும் கொழும்பிற்கு புறம்பாக அமைந்துள்ள பொருட் களஞ்சியசாலைகளை பொருட்களை களஞ்சியப்படுத்துவதற்காகவோ அல்லது வியாபார நடவடிக்கைகளுக்காகவோ 05 வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான பெறுகைக் குழுகேள்வி கோரல்**

இலங்கை புகையிரத திணைக்களம் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவரால் கொழும்பு பொருட்களஞ்சியசாலை தொகுதியில் மற்றும் கொழும்பிற்கு புறம்பாக அமைந்துள்ள புகையிரத நிலைய வளாகங்களில் காணப்படும் கீழ்வரும் பொருட்களஞ்சியசாலைகளை ஐந்து வருட காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதன் பொருட்டு கேள்விதாரர்களிடம் இருந்து முத்திரை இடப்பட்ட பெறுகைக் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன .

**கொழும்பு பொருட்களஞ்சியசாலை தொகுதியில் அமைந்துள்ள பொருட்களஞ்சியசாலைகள்**

| தொடரில க்கம் | பொருட் களஞ்சியசாலை | அளவு(ச.அ) |
|---|---|---|
| 1 | C1-G | 1872 |
| 2 | C1-F | 3744 |
| 3 | C1-D | 3870 |
| 4 | C2-E | 5792 |

**கொழும்பிற்கு புறம்பாக அமைந்துள்ள பொருட் களஞ்சியசாலைகள்**

| தொடரில க்கம் | களஞ்சியசாலைகள் அமைந்துள்ள பிரதேசம் | அளவு(ச.அ) |
|---|---|---|
| 1 | கட்டுகஸ்தோட்டை | 2600 |
| 2 | மீரிகம | 1711 |
| 3 | அம்பலங்கொடை | 1280 |
| 4 | கடுகண்ணாவ | 8000 |
| 5 | மாதம்பே | 1960 |
| 6 | தலவாக்கலை 1 | 8000 |
| 7 | தலவாக்கலை 11 | 1500 |
| 8 | ஹப்புத்தளை ஓய்வு மண்டப கட்டிடம் | 1593 |
| 9 | மாத்தளை | 730 |

01. தகைமைகள்

திணைக்கள நிபந்தனைகளுக்கு உட்பட்டு மிகவும் பொருத்தமான கேள்விதாரருக்கு குறித்த பொருட்களஞ்சியசாலையை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

02.கேள்வி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளல்.

பெறுகை ஆவணங்களை 2024 ஜனவரி மாதம் 10 ஆம் திகதி பி.ப 2.00 மணி வரை புகையிரத வர்த்தக மற்றும் சந்தைபடுத்தல் அலுவலகத்திலேயோ கொழும்பு பொருட்களஞ்சியசாலை பிரதிநிதியிடமிருந்தோ அல்லது குறித்த புகையிரத நிலையத்திலேயோ பெற்று கொள்ளலாம். அதற்காக கொழும்பு-10, இலங்கை புகையிரத சேவையின் பிரதான நிதி உத்தியோகத்தரிற்கு, கொழும்பு களஞ்சியசாலை பிரதிநிதியிற்கு அல்லது குறித்த புகையிரத நிலையத்திலேயோ மீளளிக்கப்படாத கேள்வி படிவக் கட்டணமாகரூ. 2,500/- பணத் தொகையைச் செலுத்தி, பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை புகையிரத தலைமையகத்தின் வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தலின் பிரதி அத்தியட்சகரிற்கு அல்லது கொழும்பு பொருட் களஞ்சியசாலை பிரதிநிதியிற்கு அல்லது குறித்த புகையிரத நிலையத்திற்கோ சமர்ப்பித்தல் வேண்டும். கேள்வி படிவக் கட்டணத்திற்கு மேலதிகமாக அவ் அட்டணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மீளளிக்கப்படும் கேள்வி பிணையொன்றும் செலுத்தப்படவேண்டும். ஒரு விலைமனுகோரல் படிவத்தின் மூலம் ஒரு பொருட் களஞ்சியத்திற்கு மாத்திரமே விலை மனுகோரலினை சமர்ப்பிக்கலாம்.

03.கேள்வி விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்.

மேற்படி 02ம் பந்தியில் குறிப்பிட்டுள்ளவாறு பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் மூலப்பிரதி மற்றும் நகல் பிரதிகளை முறையாக பூர்த்திசெய்து இரு உறைகளில் இட்டு முத்திரையிட வேண்டும். அவ்வுறைகளில் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். அவ்வுறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு அதன் இடதுபக்க மேல்மூலையில், "**களஞ்சியத்தின் பெயர் மற்றும் இல மற்றும் கொழும்பு பொருட்களஞ்சியசாலை கட்டிடங்களுக்கான/ கொழும்பிற்கு புறம்பாக அமைந்துள்ள பொருட்களஞ்சியசாலைகள் விலை மனுகோரல்**" என்று குறிப்பிட்டு அவ்வுறையை முத்திரையிட்டு 2024 ஜனவரி மாதம் 11 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னராக கிடைக்கக்கூடிய வகையில் தலைவர், திணைக்கள பெறுகைக்குழு, விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகம், புகையிரத தலைமையகம், ஒல்கொட் மாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு பதிவு தபாலிலோ அல்லது புகையிரத தலைமையகத்தின் (வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தலின் பிரதி அத்தியட்சகரது உத்தியோகபூர்வ அறையில் கேள்விப்பத்திரங்கள் உள்ளிடுவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள விசேட கேள்விப் பெட்டியிலோ உள்ளிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் அதன் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலினால் தாமதமானவை அல்லது தொலைந்த விண்ணப்பங்கள் தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

04. கேள்வி ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல்.

2024 ஜனவரி மாதம் 11 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு மேற்படி மூன்றாம் பந்தியில் தரப்பட்டுள்ள வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரிக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதிக்கு சமூகமளிப்பதற்கான அனுமதி வழங்கப்படும்.

05. கேள்விகளை கோருவதற்கு முன்னர் மேற்கூறிய பொருட் களஞ்சியசாலைகளை பரீட்சிப்பதற்காக விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படுவதுடன் அதற்காக கொழும்பு பொருட்களஞ்சியசாலை பிரதிநிதியின் அல்லது குறித்த புகையிரத நிலையத்திலேயோ அனுமதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

06. திணைக்கள பெறுகைக்குழுவின் தீர்மானமே இறுதி தீர்மானமாகும்.

07. கேள்விதாரர்கள் தேவையான மேலதிக விவரங்களை இலங்கை புகையிரத சேவையின் வர்த்தகம் மற்றும் சந்தைப்படுத்தல் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

தொ.பே .இல - 011 2421281 (நீடிப்பு - 8235)

தலைவர்,
திணைக்களபெறுகைக்குழு ,
புகையிரததலைமையகம்,
ஒல்கொட்மாவத்தை, கொழும்பு 10